# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

******

**முறையீட்டு மனு எண்: 179/மா/2018**
**ஆணை நாள்: 18–02–2020**

திரு. கே. கோவிந்தராஜன்,
சென்னை – 600 089.

– முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
11-வது மண்டலம்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை.

– எதிர் மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டல-11, வார்டு எண்.155, முகாம்பிகை நகர், சலசாத்தம்மன் கோயில் தெரு, கதவு எண்.4/8, முகவரியில் வசிக்கும் ஸ்ரீ முகாம்பிகை நகர் குடியிருப்போர் நலச் சங்கத்தின் செயலாளர் திரு. கே. கோவிந்தராஜன் மற்றும் சங்கச் பொறுப்பாளர்கள் அவர்களுடைய 25.7.2018 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனு எண்.179/2018 என எண்ணிடப்பட்டு , முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் சென்னை பெருநகர மாநகராட்சியின் 11வது மண்டல அலுவலரின் அறிக்கை ஆகியவைகள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை:

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டல-11, வார்டு எண்.155, முகாம்பிகை நகர், சலசாத்தம்மன் கோயில் தெரு, கதவு எண்.4/8, முகவரியில் வசிக்கும் ஸ்ரீ முகாம்பிகை நகர் குடியிருப்போர் நலச் சங்கத்தின் செயலாளர் திரு. கே. கோவிந்தராஜன் மற்றும் சங்கச் பொறுப்பாளர்கள் அவர்களுடைய 25.7.2018 நாளிட்ட கடிதத்தில் சலசாத்தம்மன் கோயில் தெரு, கதவு எண்.4/20, அருண் கார்டன் என்ற இடத்தில் சட்ட விரோதமாக அரசு அனுமதியின்றி முகில் வாட்டர் என்ற பெயரில் நிலத்தடி நீரை எடுத்து தினமும் ஆயிரக்கணக்கான கேன்களில் அடைத்து லாரிகள் மூலம் திரு. செல்வம் அவர்கள் விற்பனை செய்கிறார் என்றும், இந்த நிலத்தடி நீர் திருட்டால் இந்த பகுதியை சேர்ந்த சுமார் ஒரு கிலோ மீட்டர் சுற்றளவு ஏரியால் நிலத்தடி நீர் வறண்டுவிட்டது எனத் தெரிவித்து, இதனை தடுக்க தக்க நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்கள். மேலும் மேற்படி அதே விலாசத்தில் எண்.19/4ல் ஒரு ரசாயன கம்பெனி அனுமதியின்றி செயல்படுவதாகத் தெரிவித்து அதனையும் அகற்ற கோரியுள்ளனர்.

சென்னை -89, இராமபுரம், மூகாம்பிகை நகர், சலசாத்தம்மன் கோயில் தெரு, கதவு எண்.4/12, என்ற முகவரியில் வசிக்கம் திரு. கே. கோவிந்தராஜன், 26.9.2018 அன்று இம்முறைமன்றத்தில் ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் அவர் முறையீட்டு மனுவில் தெரிவித்திருந்த கருத்தினையே மீண்டும் தெரிவித்தார். மேலும் சலசாத்தம்மன் கோயில் தெருவில் கதவு எண்.4/19ல் ரசாயன கம்பெனி ஒன்று அனுமதியின்றி நடந்து வருகிறது என்றும் அதன் மீது நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்தார். மேலும், சட்டத்திற்கு புறம்பாக இயங்கி வரும் அருண் Associate முகில் வாட்டார் என்னும் நிறுவனம் வாய்கால் மேல் கட்டப்பட்டுள்ளது. மணப்பாகத்திலிருந்து வருகின்ற நீர் தடையின்றி செல்வதற்கு வழிவகை செய்யுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். இனி வருக்காலங்களில் ஏற்படும் வெள்ள பெருக்கினால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை களையவும், சட்டத்திற்கு புறம்பாக இயங்கி வரும் முகில் வாட்டார் என்கிற நிறுவனத்தை மூடுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீது இம்முறைமன்ற நடுவ 2.8.2018 நாளிட்ட கடிதத்தில் மண்டல அலுவலரின் அறிக்கை கோரப்பட்டதன் பேரில் பெருநகர சென்னை மாநகராட்சி, 11-வது மண்டல அலுவலர் அவரது 5.10.2018 நாளிட்ட கடித எண்.ஆர்2/2142/2018 கடிதத்தில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள முகவரியில் தற்பொழுது கெமிக்கல் நிறுவனம் நடைபெறவில்லையெனவும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -11 இராமாபுரம் கிராமம், சர்வே எண்.239/2 உட்பட்ட இராமாபுரீம் ஏரியானது இராமாபுரம் ஊராட்சியாக இருந்த போது தமிழ்நாடு அரசு வருவாய் துறை கட்டுப்பாட்டில் 7.13 ஹெக்டர் பரப்பு நிலத்துடன் வீடுகள், கடைகள் என பல ஆக்கிரமிப்புடன் 21.4.2015 அன்று மாநகராட்சியிடன் ஒப்படைக்கப்பட்டு, தற்பொழுது, Sustainable Water Mission head ன் மூலமாக சென்னை மாநகராட்சி வடிகால் துறையின் வாயிலாக ஏரிக்கு சுற்றுச் சுவர் அமைத்தல், கரையை பலப்படுத்துதல், நடைபாதை அமைத்தல், பூங்கா அமைத்தல் மற்றும் ஏரியை ஆழப்படுத்துதல் போன்ற பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து ஒப்பம் கோரி பணிகள் தொடங்கப்படவுள்ளன. மேலும், சலசாத்தம்மன் கோயில் தெரு, மூகாம்பிகை நகர் பகுதி சாலையானது சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத் துறையின் மூலம் பாதாள சாக்கடை பணிகள் நடைபெற்று வருகிறது. அப்பணிகள் முழுவதுமாக முடிந்து மாநகராட்சியிடன் ஒப்படைத்த பின் சாலையை புதுப்பிக்க உள்ளன. எனவே, தற்பொழுது, இச்சாலைகளுக்கு பழுதடைந்த சாலைவெட்டு பகுதிகளுக்கு ஒட்டுப் பணிகள் விரைவில் சீரமைக்கப்படவுள்ளன. கால் வாய் பகுதிகளை அகற்ற பொது பணித் துறைக்கு கடிதம் அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், 11-மண்டல அலுவலர் அவரது 12.7.2019 நாளிட்ட ந.க.எண்.ஆர்2/6883/2019 கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -11, கோட்டம் 155, எண்.4/20 சலசாத்தம்மன் கோயில் தெரு, ஸ்ரீ மூகாம்பிகை நகர், சென்னை 89 என்ற முகவரியில் திருவாளர் அருண் அசோசியேட்ஸ் (முகில் வாட்டர்) தொழில் உரிமம் இன்றி இயங்கி வந்த நிறவனத்தை பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் முன்னிலையில் 3.7.2019 அன்று மாலை 4.00 மணி அளவில் பூட்டி சீல் வைக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு, நேரடி விசாரணையின் அளித்த வாக்குமூலம் பெருநகர சென்னை மாநகராட்சி 11-வது மண்டல அலுவலர் அவர்களின் அறிக்கைகள் நன்கு பரிசீலிக்கப்பட்டன. முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள கோரிக்கைகள் மீது பெருநகர சென்னை மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. இந்நிலையில் 11-வது மண்டல அலுவலரின் அறிக்கையை ஏற்று இப்பொருள் தொடர்பாக மேல்நடவடிக்கையை கைவிடலாம் என முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//---

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. கே. கோவிந்தராஜன்,
   கதவு எண்.4/12, சலசாத்தம்மன் கோயில் தெரு,
   மூகாம்பிகை நகர், இராமபுரம்,
   சென்னை – 600 089.

2. மண்டல அலுவலர்,
   11-வது மண்டலம்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   123, ஆற்காடு சாலை, வளசரவாக்கம்,
   சென்னை – 600 087.

நகல்

**முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**உதவி பிரிவு அலுவலர் (மா)**
**பேரூராட்சி பிரிவு 3**
**இ. கோ. / உதரி**